**வாக்குமூலம்**

**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றம், இலுப்பூர்**

**வழக்கு எண்: CC –118/2022**

**வழக்கு சாட்சி : LW1(PW1)**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | பழனியாண்டி | தொழில் | : | விவசாயம் |
| தந்தை பெயர் | : | முத்து | சமயம் | : | |
| கிராமம் | : | புலவன்பட்டி | வயது | : | 45 |
| தாலுக்கா | | | | : | |

Solemnly affirmed by Thiru. Abraham Selvin , JA of this Court in accordance with the provisions of Act X of 1873

**(எதிரி ஆஜர் இல்லை .எதிரி தரப்பில் குவிமுச பிரிவு 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது)**

**Solemnly affirmed in accordance with the Indian Oaths Act–1969 Section –6(2) on** the **day 13th day of March 2026.**

**As Per the Circular of the Hon'ble High Court, Madras in ROC.No. 74663/2024/F1 – Dt.21.02.2025 the identity of the witness verified with their identity card.**

**Aathar Card of the Witness verified.**

**சாட்சியானவர் நீதிமன்ற அழைப்பாணையின் பேரில் வருகை புரிந்து அவருக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு முதல் விசாரணை :–**

1. நான் தற்போது புலவன்பட்டியில் குடியிருநது வந்து விவசாய வேலை செய்து வருகிறேன். இவ்வழக்கின் வாகன விபத்தில் இறந்து முத்து எனது அப்பா ஆவார். பட்டியல் சாட்சிகள் 2 முதல் 5 வரை உள்ளவர்களை தெரியும். எனக்கு எதிரி மணிவேலை தெரியாது. எதிரி ஆஜர் இல்லை. சாட்சி தானாக முன்வந்து ஆஜரானாலும் அவரை தெரியாது என்று கூறினார். சுமார் 3 வருடங்களுக்கு முன்னர் ஒருநாள் மாலை 05.00 மணிக்கு எனது அப்பா அவருடைய இரு சக்கர வாகனம் XL ல் கிழக்கில் இருந்து மேற்கு நோக்கி அதாவது புதுக்கோட்டை ரோட்டில் இருந்து மணப்பாறை ரோட்டில் சென்ற போது அவருக்கு பின்னால் வந்த லாரி என் அப்பாவின் மீது மோதிவிட்டது. என் மனைவிக்கு தகவல் தெரிந்து என் மனைவி எனக்கு போன் செய்தார். நான் விராலிமலை அரசு மருத்துவமனைக்கு சென்று விட்டேன்.

2. அதன்பிறகு என் அப்பாவை அங்கிருந்து மேல்சிகிச்சைக்காக திருச்சி அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றுவிட்டோம். பிறகு அங்கிருந்தும் மேல்சிகிச்சைக்காக மணப்பாறையில் உள்ள தனியார் மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு கொண்டு வந்து சேர்த்தோம். அங்கும் சிகிச்சை பார்க்க முடியாது என்று என் அப்பாவை வீட்டிற்கு கொண்டு வந்துவிட்டோம். அதன பிறகு 10 நாட்கள் கழித்து எனது அப்பா இறந்துவிட்டார். இறந்த என் அப்பாவை இலுப்பூர் அரசு மருத்துவமனைக்கு கொண்டு பிரேத கூறாய்விற்கு பரிந்துரை செய்தேன். என் அப்பாவின் இரு சக்கர வாகனத்தின பதிவு எண்ணும், விபத்து ஏற்படுத்திய லாரியின் பதிவு எண்ணும் தெரியாது . தற்போது

என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலம், அதில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். **கையொப்பத்துடன் கூடிய புகார் வாக்குமூலம் அ.சா.ஆ. 1 ஆகும்.** மேற்சொன்ன புகார் வாக்குமூலத்தை நான் காவல் நிலையத்தில் வந்து கொடுத்தேன்.

**( சாட்சியானவர் அரசு வழக்கை ஆதரிக்காமல் சாட்சியம் அளித்ததால் சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய பிரிவு 157 Bharatiya Sakshya Adhiniyam 2023 சட்டத்தின் படி அரசு வழக்கறிஞர் வேண்டுகோள் விடுத்தார். அதனால் நீதியின் பொருட்டு சாட்சியை குறுக்கு விசரணை செய்ய அரசு வழக்கறிஞருக்கு அனுமதி வழங்கப்பட்டது.**

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை:-**

கடந்த 14.03.2022 ம் தேதி என் மகளின் காதுகுத்து விழாவிற்காக 09.03.2022 ம் தேதி பத்திரிக்கை வைத்து விட்டு விராலிமலை ரோட்டில் திருநல்லூர் விளக்குக்கு எதிரே இடது ஓரமாக அவருடைய இரு சக்கர வாகனத்தில் , வாகன பதிவு எண் TN 55 AD 9770 வந்து கொண்டிருந்ததாகவும், பின்னால் வந்த அசோக் லேலாண்ட் லாரிTN 72 AH 9312 ஓட்டுநர் கவனக்குறைவாக வந்து அப்பாவின் மோதியதாக போலிசார் விசாரணையில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். அந்த விபத்தல் என் அப்பாவிற்கு வலது கை, வலது கால், வலது தோள்பட்டையில் இரத்த காயம் ஏற்பட்டதாக சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். மேற்படி சம்பவத்தின் தொடர்ச்சியில் லாரி ஓட்டிய நபரைப் பற்றி விசாரித்த போது மணிவேல் என்றும், இதை புகார் வாக்குமூலத்திலும், போலிசார் விசாரணையிலும் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லவில்லை.

**மறு விசாரணை – இல்லை.**

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை – இல்லை.**